அங்குள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகிழம்பாடி என்ற கிராமம் திருச்சி மாவட்டத்தில் லால்குடி ஒன்றியத்திலுள்ளது. லால்குடி ஒன்றியம் லால்குடியில் ஒரு கால்நடை மருத்துவமனையும், பூவாளூரில் ஒரு கால்நடை மருத்துவமனையும் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. லால்குடிக்கும், மகிழம்பாடிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் 12 கிலோமீட்டராகும். லால்குடிக்கும் பூவாளூருக்கும் இடையே உள்ள தூரம் 9 கிலோமீட்டராகும். அதில்லாமல் புதூர், உத்தமனூரில் கிளை நிலையமும் மற்றும் காணக்கினிய நல்லூர் கிராமத்திற்கு ஒரு கிளை நிலையமும், ஆக ஏறத்தாழ 4 மருத்துவமனைகள் உள்ளன. ஆதலால் புதிதாக கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை என்பதை கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் ரொம்ப அழகாகச் சொல்லிவிட்டார்.

வினா எண் 268, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

268—

சீர்காழியில் புறவழிச்சாலை அமைத்தல்.

*** 16126—**திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரத்தில் புறவழிச்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

1995 ஏப்ரல் 7]

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, சீர்காழி நகரப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. நீண்டகாலமாகவே நகரப் பகுதியிலுள்ள மக்கள் கஷ்டமான சூழ்நிலையில் பொது மக்களும், வியாபாரிகளும், இடைஞ்சல்களை அனுபவித்து வருகிறார்கள். கடைத்தெருவிலுள்ள சாலை மிகவும் குறுகலாகவும் உள்ளது. நாள் ஒன்றுக்கு சீர்காழி நகரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகளும் மற்றும் கனரக வாகனங்களும் செல்கின்றன. சில நேரங்களில் பொது மக்களும் கடைத் தெருவிலே நடக்கக் கூட முடியாமல் சிரமப்படுகிறார்கள். அதுபோலவே, வாகனங்களில் செல்வோருக்கும் மிகவும் சிரமமாக இருக்கிறது. போக்குவரத்து இடைஞ்சல்களால் சில நேரங்களில் சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு பல கோடி ரூபாயை சாலைக்கு வாரி வழங்கியுள்ள நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அரசில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான புறவழிச் சாலையை அமைத்துத் தர ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகரப் பகுதியிலுள்ள அரசுச் சாலைகளின் இருபுறமும் கட்டிடங்கள் நிறைந்த பகுதியாகவும், நகரத்தின் வெளிப்புறங்களிலுள்ள பகுதி தனியார் விளை நிலங்களாகவும் அமைந்து உள்ளது. மேலும், புறவழி அமைப்பு சாலை அரசுச் சாலையையும், நகராட்சி சாலையையும் இணைக்கும் வகையில் சாலை வசதிகள் ஏதும் இல்லாத காரணத்தால் சீர்காழி நகரத்தில் புறவழிச் சாலை அமைக்கும் வாய்ப்புகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் **10-40**

திரு.து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புறவழிச் சாலை அமைப்பது சம்பந்தமாக சீர்காழி நகராட்சி ஆணையர் அலுவலகத்திலிருந்து ஒரு மதிப்பீடு தயார் செய்து, எந்த வழியாகப் புறவழிச் சாலையை அமைக்கலாம் என்ற வரைபடமும் போட்டு அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் புறவழிச் சாலையை இந்த ஆண்டில் இல்லை என்றாலும், வருகின்ற நிதி ஆண்டிலாவது மறுபரிசீலனை செய்து, கருணையுள்ளத்தோடு அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, புறவழிச் சாலைகள் அமைக்கின்ற

போது போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரங்களுக்கு முன்னுரிமை கொடுத்து முதலிலே பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தமிழகத்திலே இதுபோன்று பல்வேறு நகரங்களிலே பிரச்சினைகள் இருக்கின்றன. நிதி ஆதாரத்தைக் கணக்கெடுத்துப் பார்க்கின்றபோது ஏற்கனவே சீர்காழி நகரத்தைவிட மிகவும் போக்குவரத்து நெரிசல் அதிகமான அளவு உள்ள பல நகரங்களிலே இதுபோன்ற புறவழிச் சாலைகள் இல்லாத நிலைமை இருக்கிறது. அது சம்பந்தமாக ஏராளமான கோரிக்கைகளும் அரசுக்கு வந்திருக்கின்றன. ஆகவே, தற்போது அந்த நகரங்களுக்கெல்லாம் முன்னுரிமை கொடுத்து புறவழிச் சாலை அமைக்கின்ற பணியைச் செய்த பின்புதான், சீர்காழி போன்ற நகரங்களுக்குச் செய்ய முடியும். ஆகவே, தற்போது அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 269, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

269—

திருப்பூரில் புறவழிச் சாலை அமைத்தல்.

***26529**—திரு. வெ. பழனிசாமி :*

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருப்பூர் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள சாலைகளை தற்போது போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கும் வகையில் மேம்பாடு செய்வதற்காக பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஐம்பது சதவீதம் மத்திய அரசு மானியத்துடன் மேற்கொள்வதற்காக, மைய அரசின் ஒப்புதல் கோரி, தமிழக அரசு 17-3-1995-ல் எழுதியுள்ளது. மைய அரசின்